## துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி

# திராவிட சித்தாந்தத்தின் தேவை குறித்து - கல்லூரி மாணவர்களுக்கு கருத்தரங்கம்!

## கழக மாணவர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

சேலம், நவ. 9-

தி.மு.க மாணவர் அணி சார்பில் நவம்பர் 7ஆம் தேதி சேலம், கரும்பாலையில் உள்ள தீர்த்தமலைத் திருமண மாளிகையில் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், புதுச்சேரி மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர், சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் திரு இரா.இராஜேந்திரன் தலைமை வகித்தார். சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் திரு எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி., சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர், டி.எம்.செல்வகணபதி எம்.பி., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தி.மு.க மாணவர் அணி மாநிலச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி மற்றும் மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் நோக்கவுரை ஆற்றினர். கூட்டத்துக்கு வந்திருந்தவர்களை மாநிலது துணைச் செயலாளர் சேலம் ரா.தமிழரசன் வரவேற்றுப் பேசினார். சேலம் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் சீனிவாசன் அப்பாதுரை, சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் கோகுல் காளிதாஸ், சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அ.கண்ணன் ஆகியோர் தொடர்க்க உரை ஆற்றினார்கள். சேலம் மாநகர அமைப்பாளர் எம்.மணிகண்டன் நன்றியுரை ஆற்றினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி திராவிடம் குறித்தும் சமகாலத்தில் திராவிட சித்தாந்தத்தின் தேவை குறித்தும் கல்லூரி மாணவர்களுக்கான கருத்தரங்கம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. மேலும், தமிழ்நாடு முழுவதும் தி.மு.க மாணவர் அணியின் அமைப்பான கல்லூரி மாணவர் அமைப்பான தமிழ் மன்றம் மொத்தம் 2500க்கும் மேற்பட்ட மாணவர் மன்றம் அமைக்கப்பட்டதற்கான படிவத்தை மாணவர் அணிச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் எஸ்.ஐ.ஆர்க்கு எதிராகவும், கலைஞர் பல்கலைக் கழக மசோதாவைத் தாமதப்படுத்தும் ஆளுநருக்கு எதிராகவும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. கல்வியில் சிறந்த தமிழ்நாடு, விளையாட்டுப் போட்டியில் தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானங்கள்**

**தீர்மானம் 1**

தமிழ்நாட்டைக் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற மிகப்பெரிய உயரத்துக்குக் கொண்டுசேர்த்திருக்கும் கழகத்தலைவர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும்

கல்வி ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டுமே என்றிருந்த நிலையை மாற்ற தந்தைப் பெரியார், பேறறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் தொடங்கி திராவிடப் புரட்சியாளர்களின் தொடர்ச்சியின் உச்சம்தான் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கல்வியில் நாம் இன்றைக்கு எட்டியிருக்கும் உயரம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட புதுமைப் பெண் திட்டத்தால் 5.29 லட்சம் மாணவிகளும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தால் 2.57 லட்சம் மாணவர்களும் பயன்பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டங்களால் 12ம் வகுப்பு முடித்து உயர்கல்வி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 75 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. மேலும் 'நான் முதல்வன்' திட்டத்தில் இதுவரை, 14.40 லட்சம் மாணவர்கள் பங்கேற்று, 41 லட்சம் திறன் சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். ஆண்டுக்கு 1 லட்சம் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதை இந்தத் திட்டம் உறுதி செய்திருக்கிறது. மேலும், காலை உணவு திட்டத்தில் 37,416 பள்ளிகளில் 20.59 லட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இதனால் குழந்தைகளுடைய வருகைப் பதிவேடு மேம்பட்டு, இடைநிற்றல் குறைந்துள்ளது. மேலும், அவர்களின் படிப்புத் திறன் மேம்பட்டுள்ளதுடன், ஏழை, எளிய மக்களின் சிரமங்களும் குறைந்துள்ளன. இப்படிக் கல்விக்காகப் பல்வேறு திட்டங்களைச் உருவாக்கி, அவற்றை நாட்டின் பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் செயல்படுத்தி, இந்தியாவிலேயே கல்வியில் சிறந்த தமிழ்நாடாக நம் மாநிலத்தை மாற்றியிருக்கும் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

**விளையாட்டில் உயரும் தமிழ்நாட்டின் மதிப்பு!**

**தீர்மானம் - 2**

விளையாட்டில் உலக அரங்குகளுக்குத் தமிழ்நாட்டு மாணவர்களை கொண்டுசேர்த்திருக்கும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைந் தலைவர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டுகளும்.

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், இளந்தலைவரின் ஆற்றல்மிகு செயல்பாட்டில் உலக அளவில் தமிழ்நாட்டு மாணவர்கள் அதிலும் குறிப்பாக அரசுப் பள்ளி மாணவர்கள் விளையாட்டில் மாபெரும் சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். சீனாவில் நடைபெற்ற பேட்மிண்டன் ஆசிய ஜூனியர் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில், இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார் தமிழ்நாட்டின் வீராங்கனை எஸ்.ஆர். தீக்ஷா ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர்கள் அபினேஷ் மோகன்தாஸ் மற்றும் தங்கை கார்த்திகா ரமேஷ் தங்கப் பதக்கம் வென்று சாதித்திருக்கிறார். அவர்களுக்கு கழக மாணவர் அணி சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படி உலக அளவில் தமிழ்நாட்டு மாணவர்கள் விளையாட்டுத் துறையில் நிகழ்த்திக்கொண்டிருக்கும் சாதனைகளின் பட்டியல் மிக நீளம். பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடு அளித்து பணி நியமனம், தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (ELITE) திட்டத்தின்கீழ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 25 லட்சம் ரூபாயை 30 லட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு இத்திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 12 லிருந்து 50 ஆக உயர்த்தியது. உலக அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறுவதற்கான ஊக்குவிப்பு (MIMS) திட்டத்தின் கீழ் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை 10 லட்சம் ரூபாயிலிருந்து 12 லட்சம் ரூபாயாக உயர்த்தியதோடு, தற்போது பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 125 ஆக உயர்த்தியது, சாம்பியன் டெவலப்மெண்ட் திட்டத்தின் (CDS) கீழ் பயன்பெறும் 20 வயதிற்குட்பட்டோர் பிரிவு விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 100 லிருந்து 200 ஆக உயர்த்தியது. மேலும் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை 2 லட்சத்திலிருந்து 4 லட்சமாக உயர்த்தி வழங்கியது. விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளவும், வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறவும், அதிநவீன உயர்தர விளையாட்டு உபகரணங்களை வாங்கவும், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை உருவாக்கி நிதியுதவி அளிப்பது. மேலும், கிராமங்கள் தோறும் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களைக் கண்டறிந்து அவர்களை உலகம் அரங்கில் நிறுத்திவதற்காக, தொகுதிக்கு ஒரு மினி விளையாட்டரங்கம் திட்டத்தில், தலா 3 கோடி செலவில் 75 இடங்களில் அரங்கள் அமைப்பது என வாய்ப்புகளையும் வசதிகளையும் மேம்படுத்திக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் இளந்தலைவர் அவர்கள். மேலும், செஸ் ஒலிம்பியாட், ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஷிப் கோப்பை, கேலோ இந்தியா விளையாட்டு போட்டி, ஆசிய அலைச்சறுக்குப் போட்டி, சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025 போட்டி, இரவு நேர தெரு கார் பந்தயம், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அளவிலான போட்டிகள், லட்சகணக்கான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்ட முதல்அமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள், கிராமம் தோறும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் என இளைஞர்களையும் மாணவர்களையும் விளையாட்டில் ஈடுபட வைத்து உலக ளவில் தமிழ்நாட்டின் மதிப்பை உயத்திக்கொண்டிருக்கும் இளந்தலைவர் அவர்களுக்கு நன்றியும் பாராடும்.

**முதல் தலைமுறைகளுக்கு உலகின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பு!**

**தீர்மானம் 3**

முதல் தலைமுறைப் பட்டதாரிகளை உலகின் தலை சிறந்தகல்வி நிறுவனங்களில் மேற்படிப்பு பெறும் வகையில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ள திராவிட மாடல் அரசுக்கு நன்றி...

கிராமப் பகுதிகளில் உதவியின்றி சிரமத்துக்குள்ளாகும் முதல் தலைமுறை பட்டதாரிகளைப் பள்ளிக் கல்வித் துறைக் கண்டறிந்து தேர்வு செய்து அவர்களைத் தேசிய மற்றும் உலக அளவில் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பெறுவதற்கான உதவிகளைச் செய்து வருகிறது திராவிட மாடல் அரசு. இதன்மூலம். ஆண்டுதோறும் ஐ.ஐ.டி, என்.ஐ.டி போன்ற பல்வேறு நிறுவனங்களில் சேருவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 20242025ஆம் கல்வி ஆண்டில் 1500 முதல் 2000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், இது வரை, சிறப்பு தேவைகள் கொண்ட மாணவர்கள் 150 பேருக்கு (CHILDREN WITH SPECIAL NEED) பயிற்சி அளித்து அவர்களையும் படிக்க வைத்திருக்கிறது திராவிட மாடல் அரசு. கல்வியின் மாண்பை உணர்ந்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் திராவிட மாடல் அரசுக்கு நன்றியும் பாராட்டுகளும்.

**தீர்மானம் 4**

இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்த கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

தமிழ்நாட்டிற்காக முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜெர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட கழகத் தலைவர் அவர்கள், புகழ் பெற்ற இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சமூக நீதியின் தந்தை பெரியார் அவர்களின் படத்தினை திறந்து வைத்தோடு "ஓர் இனத்துக்கே சுயமரியாதை உணர்வை ஊட்டி தலைநிமிர வைத்த தந்தை பெரியாரை இன்றைக்கு உலகம் கொண்டாடி வருவதுதான் தமிழ்நாட்டிற்கும், திராவிட இயக்கத்திற்கும் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை!" எழுச்சிமிக்க உணர்ச்சிமிக்க கருத்தாழமிக்க உரியினையும் நிகழ்த்தி தந்தைப் பெரியாரை உலகமயமாக்கிய தோடு தான் பெரியாரின் கொள்கை வாரிசு என்பதை உலகம் முழுமைக்கும் பறை சாற்றியிருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள். ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து பெரியாரின் புகழுக்கு மேலும் ஒரு மகுடத்தைச் சூட்டிய கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

**தீர்மானம் 5**

தமிழ்நாட்டு மாணவர்களை மேடையேற்றி அவர்களின் உணர்வுகளை உலக றிச்செய்த கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி

புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், விளையாட்டு மேம்பாடு, சாதனையாளர்களுக்கு ஊக்கம் அளித்தல், சிறப்புக் குழந்தைகள் சாதனையாளர்கள் உள்ளிட்ட கல்வி மேம்பாட்டுத் திட்டங்களின் பயனாளர்களை நேரு உள்விளையாட்டு அரங்கில் மாபெரும் மேடை அமைத்து அவர்களின் உணர்வுகளை உலகமெல்லாம் கொண்டு சேர்த்ததோடு அவர்களை உச்சிமுகர்ந்து பாராட்டிய நம் கழகத் தலைவர் அவர்களுக்கும் இளந்தலைவர் அவர்களும் ஆயிரம் ஆயிரம் நன்றி. தமிழகம் கல்வியில் பெற்றுள்ள இந்த எழுச்சியை, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களும் திரும்பிப் பார்க்கின்றன. நம் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை மற்ற மாநிலங்களில் செயல்படுத்த திட்டம் வகுத்து வருகிறார்கள். ஆனால், ஒன்றியத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் நம் கல்வி எழுச்சிக்குத் தடைபோட நினைக்கிறார்கள். தமிழ்நாட்டில் கல்விக்காக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை இல்லங்கள் தோறும் கொண்டுசேர்ப்போம்.

**நகர்ப்புறப் பகுதிகளில் காலை உணவுத் திட்டம்!**

**தீர்மானம் - 6**

காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவு படுத்திய திராவிட மாடல் அரசுக்கு நன்றி

மாணவர்களின் பசியைப் போக்கி, கல்வியில் அவர்களின் கவனத்தை அதிகரிக்க காலை உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார் தாயுமானவர் நம் கழகத் தலைவர் அவர்கள். இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் 2022 செப்டம்பர் 15ஆம் தேதி மதுரை ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் இந்தத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதையடுத்து 2023 ஆகஸ்ட் 25ஆம் தேதி திருக்குவளையில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்தார். இதன் மூலம் 30 ஆயிரத்து 992 பள்ளிகளில் படிக்கும் 18 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயன்பெற்றனர். மேலும், 2024 ஜூலை 15 ஆம் தேதி பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளில், அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்யப்பட்டது. இதன் மூலம் 3 ஆயிரத்து 995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் 2 லட்சத்து 23 ஆயிரத்து 536 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். தற்போது இந்தக் காலை உணவுத் திட்டம் நகர்ப்புறத்தில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 3 லட்சத்து 5 ஆயிரம் மாணவர்கள் பயனடைவார்கள். கழகத் தலைவர் தாயுமானவரின் இந்தத் திட்டத்தை இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் செயல்படுத்த முயல்கின்றன. உலக நாடுகள் இந்தத் திட்டத்தைப் பாராட்டுகின்றன. உலக அரங்கில் தமிழ்நாட்டின் பெருமையைக் கொண்டு சேர்த்த கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும்.

**தமிழ்நாட்டின் பள்ளிகளில் வாட்டர் பெல் திட்டம்!**

**தீர்மானம் 7**

தமிழ்நாட்டின் பள்ளிகளில் வாட்டர் பெல் (WATER BELL) திட்டத்தினை தமிழகமெங்கும் இருக்கக் கூடிய பள்ளிகளில் கொண்டு சேர்க்க மாணவர் அணி சார்பில் பரப்புரை மேற்கொள்ளப்படும்

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மாணவர்கள் தண்ணீர் குடிப்பதை உறுதி செய்யும் வகையில் வாட்டர் பெல் என்ற திட்டத்தைத் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் அரசு பள்ளிகளில் ஒவ்வொரு நாளும் காலை 11 மணி, மதியம் 1 மணி மற்றும் 3 மணி என 3 முறை வாட்டர் பெல் அடிக்கப்படும். அப்போது மாணவர்கள் கண்டிப்பாக தண்ணீர் குடிக்க வேண்டும். மாணவர்களிடையே நீர்ச்சத்து குறைபாடு ஏற்படுவதை தடுக்கும் வகையில் இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை.

**கலைஞர் பல்கலைக் கழகம்!**

**தீர்மானம் 8**

கலைஞர் பல்கலைக்கழகம் அமையத் தடையாக இருக்கும் ஆளுநருக்குக் கண்டனங்கள்

தமிழ்நாடு முதலமைச்சரை வேந்தராகக் கொண்டு கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரில் புதிய பல்கலைக்கழகத்தை அமைப்பதற்காக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கலைஞர் பல்கலைக்கழக மசோதாவுக்கு ஒப்புதல் வழங்காமல் தாமதப்படுத்தியதோடு அதைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக அனுப்பி ஏழை, எளிய மாணவர்களின் கல்விக் கனவை நனவாக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சியைத் தாமதப்படுத்தி, அவர்களின் கனவைச்சிதைத்திருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. ஆளுநர் ஆர்.என்.ரவியின் இந்த எதேச்சதிகாரப் போக்கை, தமிழ்நாட்டின்மீதான வெறுப்பை, தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வி பெறுவதைத் தடைசெய்யும் வன்மத்தை வன்மையாகக் கண்டிப்பதோடு உடனடியாக முத்தமிழறிஞர் கலைஞர் பல்கலைக்கழக மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

**திராவிடச் சித்தாந்தக் கருத்தரங்குகள்**

**தீர்மானம் 9**

கழக இளந்தலைவர் அவர்களின் பிறந்தநாளில் கழக மாவட்டங்களிலும் மாணவர்களிடையே திராவிட சித்தாந்தங்களைக் கொண்டுசேர்க்கும் வகையில் கருத்தரங்கங்கள் நடத்த வேண்டும்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளந்தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக மாவட்டங்களில் மாணவர்களுக்கான கருத்தரங்குகளை ஒருங்கிணைப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. மாணவர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மூலம் கழக மாவட்டத்துக்குட்பட்ட கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து இந்தக் கருத்தரங்கை நடத்த வேண்டும். கருத்தரங்கம் நவம்பர் 21, 22, 23 ஆகிய தேதிகளில் ஏதாவது ஒரு தேதியில் நடத்தப்பட வேண்டும். கருத்தரங்கம் குறித்து முரசொலியில் அறிவிப்பு வெளியிட வசதியாக நவம்பர் 15ஆம் தேதிக்குள் நிகழ்விடம், பேச்சாளார்கள் குறித்த தகவல்களை மாணவர் அணித் தலைமை அலுவலகத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

**தீர்மானம் 10**

SIR எனும் இந்திய மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் பா.ஜ.கவின் கயமைத்தனத்துக்கு எதிராகக் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுக்கும் அனைத்து வகை அறப்போராட்டத்துக்கு மாணவர் அணி சார்பில் வலுச்சேர்க்க வேண்டும்.

"தகுதி வாய்ந்த ஒரு குடிமகன் கூட வாக்குரிமை பெறாமல் இருந்து விடக் கூடாது" என்பதற்காகத் தான் SIR மேற்கொள்ளப்படுவதாக தலைமைத் தேர்தல் ஆணையர் கூறுகிறார். ஆனால் பீகாரில் SIR மேற்கொள்ளப்பட்ட பிறகு அம்மாநிலத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 6% குறைந்துள்ளது. வாக்காளர் பட்டியலில் இருந்து 47 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர். 21 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இறுதி வாக்காளர் பட்டியலில் 7.42 கோடி பேர் இடம் பெற்றுள்ளனர். இதன் மூலம் SIR மேற்கொள்ளப்படுவதற்கு தலைமை தேர்தல் ஆணையர் கூறும் காரணம் சரியானது அல்ல என்பதை உணர முடிகிறது.

சிறுபான்மையினர் வாக்குகளையும், பா.ஜ.கவின் எதிர்ப்பு வாக்குகளையும் குறிவைத்து நீக்கியதும், தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதித்திட்டத்தோடு தான் தேர்தல் ஆணையம் செயல்பட்டிருக்கிறது என்பதும் வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. ஆனால், இது தொடர்பான எந்தக் கேள்விக்கும் மக்கள் மன்றத்திலோ, உச்ச நீதிமன்றத்திலோ எந்த பதிலையும் தேர்தல் ஆணையம் சொல்லவே இல்லை. பீகாரில் நடந்த குளறுபடிகளை சரி செய்யாமல், தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு SIR திட்டத்தை செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது.

தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கொண்டு வருவது வாக்காளர்களை நீக்கும் தந்திரம். பீஹாரில் நடந்த இப்பணிக்கு எதிரான வழக்கில் இறுதி உத்தரவு இன்னும் பிறப்பிக்கவில்லை. இச்சூழலில் தமிழ்நாட்டில் இதைச் செய்வது ஜனநாயகத்துக்கு எதிரானது. என முழங்கியதோடு இதற்கு எதிராக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நீதிமன்றத்தை நாடியிருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள். தலைவர் அவர்களின் சட்டப் போராட்டம் வெற்றிபெறும். கருத்தியல் ரீதியாக மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் மாணவர் அணி SIRக்கு எதிராகப் பிரசாரத்தை மேற்கொண்டு கழகத் தலைவரின் கருத்துக்கு வலுசேர்க்கும் தமிழகத்தில் இன்னும் சில மாதங்களில் தேர்தல் நடக்க உள்ளது. இந்த நேரத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்ய முயல்வது அரசியல்சாசனம் அளித்துள்ள உரிமைக்கு எதிரானது. எனவே, ஒன்றிய அரசு இதை உடனடியாகக் கைவிட வேண்டும் என வலியுறுத்துகிறோம். மேலும் நவம்பர் 11ஆம் தேதி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் மாணவர் அணி சார்பில் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

**இருநூறு தொகுகளில் வெற்றி!**

**தீர்மானம் 11**

'எனது வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி இருநூறு தொகுதிகளில் வெற்றி' என்ற கழகத் தலைவரின் முழக்கத்தை நிறைவேற்றுவோம்!

தொண்டர்களின் முயற்சியில் தமிழ்நாட்டில் திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைக்கும் நோக்கில் முதல்வர் அவர்கள், "தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் ஏற்படுத்திய சுயமரியாதை உணர்வால்தான், பா.ஜ.கவின் பாசிச ஆட்சிக்கு அடிபணியாமல் முதுகெலும்போடு எதிர்த்து நிற்கிறோம். எதிர்த்து நிற்பது மட்டுமல்ல; விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களை திரும்ப பெற வைத்தது மாதிரியான பல போராட்டங்களில் வெற்றியும் பெற்றிருக்கிறோம். இப்போது கூட, தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக, பல்வேறு மாநில முதல்வர்களை ஒன்றிணைத்தோம். அகில இந்திய மருத்துவப் படிப்பு ஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான உரிமைக்காக போராடி வாதாடி வெற்றி பெற்றோம். இதையெல்லாம் பார்த்துதான், பா.ஜ.கவுக்கு நம் மீது கோபம் வருகிறது. அதனால்தான், பல்வேறு சூழ்ச்சிகளில் அவர்கள் ஈடுபடுகிறார்கள்.

உங்களுடைய உழைப்பால், ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாம், அடுத்து ஏழாவது முறையும் ஆட்சி அமைக்க வேண்டும்! அதற்குத் தான் இந்தப் பயிற்சிக் கூட்டம். அதிலும், 2019ம் ஆண்டு முதல், நாம் எதிர்கொண்ட அத்தனை தேர்தல்களிலும், மகத்தான வெற்றிகளை பெற்று வருகிறோம். நம்முடைய வெற்றிகள், நம்முடைய எதிரிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 2026 தேர்தலிலும் நாம்தான் வெற்றிபெற போகிறோம். அன்றைக்கு தலைப்புச் செய்தி என்ன என்றால், "திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடங்கியது!". என முழங்கியிருக்கிறார்.

கழகத் தலைவர் அவர்களின் முழக்கத்தை உண்மையாக்க கழகத் தலைவர் நிர்ணையித்த 'அந்த இலக்கை நிறைவேற்ற "தமிழினத்தின் தலைவராம் நம் தலைவரை... இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆக்குவோம்...' என்று சூளுரைத்துள்ளார் நமது இளந்தலைவர். 'கழகத் தலைவரின் இலக்கையும், இளந்தலைவரின் சூளுரையையும் நிறைவேற்ற எனது வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி என்ற முழக்கத்தை முன்னெடுத்து டிசம்பர் 5 தொடங்கி ஒரு மாத காலம் நாம் வாழும் பகுதிகளில் வீடுவீடாகச் சென்று தேர்தல் பரப்புரை செய்து கழகத் தலைவர் அவர்களை மீண்டும் அரியணை ஏற்றுவோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.








பஹ்ரைன், அயலக தமிழ் இந்தியர் சங்கம் (NRTIA) சார்பில், கழகத்தின் திருவிழாவான முப்பெரும் விழா 31.10.2025 அன்று பஹ்ரைன் மனாமா நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் முஹமது ஹுசைன் மாலிம், கபீர் அகமது, இஸ்மாயில், கருணாநிதி சண்முகம், வேம்புராஜ், சுல்தான் இப்ராஹிம், திருமேனி, சதீஷ் குமார், மன்னை முபாரக், லலித் குமார், முபாரக், பாபு, மணிவண்ணன் சந்திரன், பிரபா, ஆபீத் அலி, அசோக், பவுல் டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக அயலக அணி செயலாளர், எம்.எம். அப்துல்லா மற்றும் அயலக அணி துணை செயலாளர், பரிதி இளம்சுருதி எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.